


அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (22.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு140, சைதாப்பேட்டை, ஜோன்ஸ் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழங்கும் கூடத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் எம். ஸ்ரீதரண் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு தலைமையில்

# சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் சட்டமன்ற தேர்தல் 2026 ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் வே.தேவேந்திரன் அறிவிப்பு !

*சென்னை, டிச.23-*

சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர் வே.தேவேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் திரு நே.சிற்றாசு தலைமையில், மாவட்ட வழக்கறிஞர் அணியின் தலைவர் திருமதி சி. சியாமளா, துணைத் தலைவர் மோ. பாலசசந்தர் ஆகியோர் முன்னிலையில் சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் மாவட்ட பகுதி நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்களின் ஆலோசனை கூட்டம், சென்னை, நுங்கம்பாக்கம், காம்தார் நகர் முதல் தெருவில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று 23.12.2025 மாலை 6.00 மணியளவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர், துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி தலைவர்கள், பகுதி துணைத் தலைவர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

பொருள் வரும் சட்டமன்ற தேர்தல் 2026க்கு திமுக சட்டத்துறையினரால் சென்னை மேற்கு மாவட்ட திமுக வழக்கறிஞர் அணியில் உள்ள வழக்கறிஞர்கள் மூன்று சட்டமன்ற தொகுதிகளான சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு மற்றும் அண்ணாநகர் தொகுதிகளுக்கு வழக்கறிஞர் அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (DLC) சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC) மற்றும் முதல் நிலை பாக ஒருங்கிணைப்பாளர் (FLC) காக நியமிக்கப்பட்டுள்ளவர்களின் செயல்பாடுகள் மற்றும் அவர்கள் எவ்வாறு கழகப்பணியாற்றுவது குறித்தும் ஆலோசனையும் மற்றும் மாவட்ட வழக்கறிஞர்களுக்கு திமுக சட்டத்துறையினரால் வழங்கப்பட்ட "கழக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வுக்கான வழக்கறிஞர் அணியின் செயல்பாட்டு விதி கள்" நகலை வழங்குதல்.

இவ்வாறு மாவட்ட ஒருங்கினைப்பாளர் (DLC) மற்றும் சென்னை மேற்கு மாவட்ட திமுக வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர் வே. தேவேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




திருவள்ளூர் மாவட்டம் இரா.கி.பேட்டை கிழக்கு ஒன்றியம் G.C.S.கண்டிகை ஊராட்சி C.G.N.கண்டிகை கிராமத்தில் ரூபாய் 17 லட்சத்தில் அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்டும் பணிக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி பணியினை துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் பா. சம்பத், ம.ரகு, நிர்வாகிகள் ராஜேந்திரன்,வி. ரகு, திருநாவுக்கரசு, மாத்தையா, சதீஷ், ரஜினி, சீனுமந்திரி, நவீன், கார்த்திக், மணி, இதயா,உள்பட பொதுமக்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் இதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நாளை (24.12.2025 - புதன்கிழமை) காலை 10 மணி அளவில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் தலைமையில் நடைபெறும் என மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் - செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

| வ. எண் | ஒன்றியம் | கண்டன உரை |
|---|---|---|
| 1 | செஞ்சி | செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.<br>மாவட்ட கழக செயலாளர், விழுப்புரம் வடக்கு மாவட்டம் |
| 2 | மேல்மலையனூர் | ப.செந்தமிழ்ச்செல்வன்<br>மாநில விவசாய அணி இணை செயலாளர் |
| 3 | வல்லம் | டாக்டர் ப.சேகர்<br>மாவட்ட அவைத்தலைவர் |
| | | செஞ்சி சிவா<br>மாநில தீர்மானக் குழு உறுப்பினர் |
| | | திருமதி.அமுதா ரவிக்குமார்<br>மாவட்ட துணை செயலாளர் |
| 4 | மயிலம் | டாக்டர் R.மாசிலாமணி<br>மாநில தீர்மானக் குழு துணை தலைவர் |
| | | அருணகிரி<br>மாவட்ட துணை செயலாளர் |
| 5 | ஒலக்கூர் | ஆசிரியர் எம்.கண்ணன்<br>திண்டிவனம் நகர செயலாளர் |
| | | சீனுராஜ்<br>தலைமைச் செயற்குழு உறுப்பினர் |
| 6 | மரக்காணம் | ரமணன்<br>மாவட்ட பொருளாளர் |
| | | ரவிக்குமார்<br>மாவட்ட துணை செயலாளர் |

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.,**
பொறுப்பாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

### 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, 8 ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நாளை (24.12.2025) காலை நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள 8 ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நாளை (24.12.2025 - புதன்கிழமை), காலை 10 மணியளவில், கீழ்க்கண்ட விவரப்படி ஒன்றிய பா.ஜ.க.அரசையும், அ.தி.மு.க. வையும் கண்டித்து கீழ்க்கண்ட இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| ஒன்றியம் பெயர் | ஒன்றிய கழக செயலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஏற்பாட்டாளர்கள் | தலைமை | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| திருவெறும்பூர் தெற்கு | சி.கங்காதரன் | வண்ணை அரங்கநாதன் | குண்டூர் ஊராட்சி |
| திருவெறும்பூர் வடக்கு | கே.எஸ்.எம்.கருணாநிதி | கே.என்.சேகரன் | வாழவந்தான் கோட்டை ஊராட்சி |
| மணப்பாறை | சி.ராமசாமி | கவிஞர் சல்மா | பன்னாங்கொம்பு ஊராட்சி |
| மருங்காபுரி வடக்கு | சி.செல்வராஜ் | பி.எம்.சபியுல்லா | வேம்பனூர் ஊராட்சி |
| மருங்காபுரி தெற்கு | சி.சின்ன அடைக்கண் | இரா.மூக்கன் | செவல்பட்டி ஊராட்சி |
| மருங்காபுரி மத்தியம் | எம்.பழனியாண்டி | என்.கோவிந்தராஜ் | கவுண்டம்பட்டி ஊராட்சி |
| வையம்பட்டி வடக்கு | ஆர்.சீரங்கன் | அ.த.த.செங்குட்டுவன் | V.பெரியப்பட்டி பூலாம்பட்டி ஊராட்சி |
| வையம்பட்டி தெற்கு | வி.ஏ.ராஜேந்திரன் | இரா.குணசேகரன் | எலமணம் ஊராட்சி |

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, கிளை கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகமுகவர்கள், கழகமுன்னோடிகள் அந்தந்த ஒன்றியங்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு, நம்முடைய கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு தந்து அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

### டிசம்பர் 27, 28 – ஜனவரி 3, 4 ஆகிய 4 நாட்கள் நடைபெறும் வாக்காளர்கள் சேர்ப்பு சிறப்பு முகாமில்

# விடுபட்ட புதிய வாக்காளர்களை சேர்த்திடும் முக்கிய பணியில் கழகத்தினர் மும்முரமாக ஈடுபடுவீர்!

## திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினருக்கு – மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் வேண்டுகோள்!

*திருவள்ளூர் டிச 23;*

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள 2 சட்டமன்றத் தொகுதிகளிலும் வரைவு வாக்காளர் பட்டியலை பிரித்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மூலம் வழங்கப்பட்டு, அந்த வரைவு வாக்காளர் பட்டியல் பி.எல்.ஏ.2, வசம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அந்தந்த பூத் பி. எல்.ஏ. 2. பி.டி.ஏ. பி.எல்.சி. மற்றும் கழகத்தினர் அனைவரும் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலை சரி பார்த்திடும் இன்றியமைப் பணியில் இன்று முதல் ஈடுபட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பூத் வாரியாக வாக்காளர் பட்டியலை கழகத்தினர் அனைவரும் சரி பார்த்து எஸ்.ஐ.ஆர். படிவம் தந்தும் வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களையும், வாக்காளர் பட்டியல் பெயர் இருந்தும் எஸ்.ஐ.ஆர். படிவம் கிடைக்கப் பெறாத வாக்காளர் பட்டியலையும், மற்றும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களையும் கண்டறிந்து மொத்தத்தில் ஒவ்வொரு பாகத்திலும் நம்முடைய கழக வாக்காளர், கழக ஆதரவு வாக்காளர் எவர் பெயரும் விடுபடாத வகையில் அனைவரையும் படிவம் 6 ல் வாக்காளர்களாக சேர்த்திடும் முக்கிய பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இறந்த இடம் மாறிய வாக்காளர்களின் பெயர்கள் மீண்டும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று இருந்தால் அவர்களின் பெயர்களை படிவம் 7 ல் நீக்கிடும் பணியில் உடனே ஈடுபட வேண்டும். இந்நிலையில் இந்திய தேர்தல் ஆணையம் விடுபட்ட வாக்காளர்கள் புதிய வாக்காளர்களை சேர்ப்பதற்காக வருகிற டிசம்பர் 27, 28 மற்றும் ஜனவரி 3, 4 ஆகிய 4 நாட்கள் சிறப்பு முகாம் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது. தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முந்தின நாள் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தியதின்படி வருகிற டிசம்பர் 27, 28 மற்றும் ஜனவரி 3, 4 ஆகிய நான்கு நாட்கள் நடைபெறும் வாக்காளர்கள் சேர்த்து சிறப்பு முகாம்களில் கழகத்தினர் அனைவரும் கடுமையாக உழைத்து வாக்காளர் பட்டியலில் பெயர்கள் இருந்தும் எஸ்.ஐ.ஆர். படிவம் கிடைக்க பெறாதவர்கள், எஸ்.ஐ.ஆர். படிவம் தந்தும் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விடுபட்ட வர்கள்.

மேலும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களை சேர்த்திடும் இன்றியமையா முக்கிய பணியில் மும்முரமாக ஈடுபட்டு முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று அனைவரையும் இரு கரம் கூப்பி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.என மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம். எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கை வாயிலாக தெரிவித்து இருந்தார்.

# முன்னாள் புதுக்கோட்டை மாநகரச் செயலாளர் ஆ.செந்தில் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் எஸ்.ரகுபதி – கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

*புதுக்கோட்டை, டிச.23-*

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், இயற்கை வளங்கல் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை முன்னாள் மாநகர செயலாளர் ஆ.செந்தில் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று (23.12.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 9 மணியளவில் புதுக்கோட்டையில் உள்ள ஆ.செந்தில் அவர்களின் சமாதிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. இதனைத் தொடர்ந்து மதியம் 12 மணியளவில் அன்னதானம் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் தமது அறிக்கையில கூறி உள்ளனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட எல்லாபுரம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டம் அத்திகவனூர் ஊராட்சி பாக என் 268 பகுதியில் ஒன்றிய செயலாளர் ஆ.சத்தியவேலு தலைமையில் நடைபெற்றது. இதில். மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறினார். உடன் தொகுதி பார்வையாளர் கவி கணேசன், மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் பி.எல்.ஏ.2 , பி.எல்.சி., உள்பட பலர் உள்ளனர்.